விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 14 ஜூலை 22 இதழ் 170
யாழ்ப்பாணம் புதன்கிழமை 30-7-1986

## கூட்டணியினர் இன்று புதுடில்லி பயணம்

### ஆகஸ்ட் 3-ம் வாரத்தில் கொழும்பில்?

கொழும்பு, புதன் தற்போது தமிழகத்திலுள்ள கூட்டணித் தலைவர்கள், இந்திய மத்திய உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமுகமாக இன்று புதுடில்லி செல்லவுள்ளனர்.

இணையமைச்சர் சிதம்பரம், வெளியுறவுக் கொள்கை வகுக்கும் கமிட்டித் தலைவர் திரு. பார்த்தசாரதி, வெளியுறவு அமைச்சர் திரு. சிவ்சங்கர் உட்பட பலருடன் கூட்டணிக் குழுவினர் உயர் மட்டப் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளனர். இறுதிக்கட்டப் பேச்சு வார்த்தைகள் பிரதமர் ராஜீவுடன் நடைபெறும்.

இதனிடையே ஆகஸ்ட் மாதம் 3-ம் வாரமளவில் கூட்டணிக் குழுவினர் கொழும்பு வருவர் என கூட்டணிப் பிரமுகர் ஒருவர் 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்தார்.

கூட்டணியினர் இம்மாதம் 12-ம் திகதி கொழும்பு வந்து அரசாங்கத்துடனும், எதிர்க் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டு கடந்த வியாழனன்று தமிழகம் திரும்பியதும் தெரிந்ததே. (ய-ஊ)

### நேபாளத்தில் பேச்சுவார்த்தை?

கொழும்பு செவ்வாய்

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்ப்போராளிகளுக்குமிடையிலான சமாதான பேச்சுவார்த்தைகள் நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவில் நடைபெறலாமென கொழும்பிலிருந்து பிரசுரமாகும் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. ய-ஊ)

### தொண்டமான் நம்பிக்கை

சென்னை, ஜூலை 30

இலங்கைத்தமிழர் பிரச்னைக்கு சுமுகமான முடிவு காணும் பொறுப்பை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கும் என இலங்கை கிராமிய கைத்தொழிற்துறைஅமைச்சர் திரு எஸ் தொண்டமான் சென்னையில் செய்தியாளரிடம் நம்பிக்கை தெரிவித்துள்ளார் (இ-ஒ)

### யாழ்.கோட்டையிலிருந்து 'ஷெல்' தாக்குதல்:

# ஒருவர்பலி;6பேர் காயம்

# நீதிமன்றம், வீடு சேதம்

யாழ்ப்பாணம் புதன்

யாழ்ப்பாணம் கோட்டை முகாமிலிருந்து நேற்று அதிகாலை ஒருமணியளவில் நடத்தப்பட்ட 'ஷெல்' தாக்குதலில் பொதுமக்களில் ஒருவர் பலியானார், ஆறுபேர் காயமடைந்துள்ளனர் யாழ். மேல் நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம் உட்பட பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

யாழ். கோட்டை முகாமிலிருந்து நேற்று அதிகாலை நடந்த ஷெல்தாக்குதலில்ஆரிய குளத்தை சேர்ந்த மா சந்திரராசா (30 வயது) பலியானார். மற்றும் ஆறுபேர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தியடி, ஆரியகுளம், ஆனைப்பந்தி, கொட்டடி, நாவலர் வீதி உட்பட பல இடங்களில் தொடர்ச்சியாக ஷெல்கள் விழுந்து வெடித்தன, இதனால் வீடுகள் சேதமடைந்துள்ளன, வீதிகளில் தந்தி கம்பிகள் மின்கம்பிகள் ஷெல் தாக்குதலினால் அறுந்துள்ளன.

யாழ் மேல்நீதிமன்றம், யாழ் நீதவான் நீதிமன்றம் ஆகியன நேற்று அதிகாலை கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலின்போது சேதமடைந்தன.

யாழ். மேல்நீதிமன்ற கூரையில் பெரிய துவாரம் ஏற்பட்டுள்ளது, உள்ளே ஷெல் பாகங்களும் காணப்பட்டன. நீதவான் நீதிமன்றகூரைகளும் சேதமடைந்துள்ளன.

இந் நீதிமன்றங்களிலும், கோட்டைப் பக்கமாகவுள்ள கூரைப்பகுதிகளே சேதமடைந்துள்ளன.

ஷெல் தாக்குதலுக்குள்ளாகிச் சேதமடைந்த யாழ்.மேல்

(4ம் பக்கம் பார்க்க)

### காங்கேசன் துறைமுகத்தில் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்

மாவிட்டபுரம், செவ். காங்கேசன்துறை துறைமுகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு பகலில் இராணுவ காவலும் போடப்பட்டுள்ளது

காங்கேசன்துறை துறைமுகப்பகுதியை அண்மையில் பாதுகாப்புப்படை உயரதிகாகள் குழு ஒன்றுவந்து பார்வையிட்டுச் சென்றதை யடுத்து

[4-ம் பக்கம் பார்க்க]

### கோட்டை முகாம் மீது தாக்குதல்:

## தளபதி உட்பட மூவர் காயம் இரு சிப்பாய்கள் பலி!

### — அரச அறிக்கை

கொழும்பு, செவ்.

யாழ். கோட்டை முகாம் மீது நேற்று தீவிரவாதிகள் நடத்திய மோட்டார் தாக்குதலின்போது ஒரு இராணுவத்தினர் பலியானதாகவும் முகாமின் தளபதிஉட்பட மூவர் காயமடைந்ததாகவும் அரச தரப்பில் தெரிவிககப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளின்மோட்டார் குண்டுகளில் ஒன்று இராணுவ அதிகாரிகளின் விடுதியில் விழுந்து வெடித்தபொழுதே இந்த இரு இராணுவத்தினர் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல்களின் போது காயமடைந்தவர்களில் முகாமின் தளபதியும் ஒருவர் என்றும் காயமடைந்த மூவரும் தற்பொழுது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகிறார்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

### சல்பில்ல தோட்டததில் சம்பவம்:

## 12மலையக தமிழ்குடும்பம் மீது தாக்குதல்: வீடுகளுக்குத் தீ

(ஹற்றனிலிருந்து நமது நிருபர்)

பன்வில எனுமிடத்திலுள்ள சல்பில்ல தோட்டத்துக்குள் புகுந்த காடையர் கோஷ்டி ஒன்று ஒரு லயனிலுள்ள 12 தொடர் வீடுகளில் கொள்ளை அடித்தும், அவ்வீடுகளுக்குத் தீமூட்டி எரித்தும், வீடுகளிலிருந்தவர்களைத் தாக்கியும் அனர்த்தங்கள் செய்துள்ளனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து 12 குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் உடுத்த உடையுடன் காடுகளுக்குள் தஞ்சமடைந்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் தோட்டத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இக்கதி நேர்ந்தது.

வவனியாவில் இடம் பெற்ற பஸ்குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது பன்வில கிராமத்தைச் சேர்ந்த சிங்களவர் ஒருவரும் கொல்லபபட்டிருந்தார். இவ

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ். கோட்டை இராணுவ முகாம் மீது தமது இயக்கப் போராளிகளால் மோட்டார் தாக்குதல் நிகழ்த்தியதில் இருவர் கொல்லப்பட்டனர் என்றும் நால்வர் படுகாயமடைந்தனர் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகாமுக்குள் கொல்லப்பட்டவர்களுள் லெப்டினன்ட் விக்ரமநாயக்கா (24 வயது), சிப்பாய் செனவரத்தின ஆகிய இருவரும் அடங்குவர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''நேற்று மாலை கோட்டை இராணுவ முகாமில் பலமணி நேரமாக இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோசமும், மோட்டார் தாக்குதலும்மேற்கொண்டவாறு இருந்தனர்.

[4- பக்கம் பார்க்க]

### வாக்கெடுப்புக்கு

கொழும்பு, செவ்

''இனப்பிரச்னையைத்தீர்க்குமுகமாக மாகாண சபைகள் அமைப்பது பற்றிய அரசாங்கத்தில் திட்டம் பொது ஜனவாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும்''

இவ்வாறு, அரசின் புதிய யோசனைகள் பற்றி ஆராய்ந்த மகாசங்கத்தின் விஷேட குழுவொன்று தனது அறிக்கையில் கூறியுள்ளது. (ய - ஊ)

## ஒருதலைப்பட்சமான தீர்வு எதுவும் இருக்கக்கூடாது

### -இணை அமைச்சர்

புதுடில்லி, ஜூலை30

'இலங்கை இனப்பிரச்னைக்கு அமைதியான பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றைக் காண்பதற்கு இலங்கை அரசுக்கும் தமிழ் பிரதிநிதிகளுக்குமிடையே ஆலோசனை நடைபெறும் இத்தருணத்தில் அப்பாவித்தமிழர்கள் மீது நடத்தப்பட்டுவரும் வன்முறைதள் நிறுத்தப்படவேண்டும் என்று இந்திய அரசு இலங்கை அரசாங்கத்தை வநுபுறுத்திவருகிறது' என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் திரு கே. ஆர் நாராயணன் தெரிவித்துள்ளார்.

நேற்றுநடைபெற்ற ராஜ்சபா கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு கூறினர்.

இலங்கைப் பிரச்னைக்கு ஒருதலைபட்சமான தீர்வு எதுவும் இருக்கக்கூடாது என்பதே இந்தியாவின் கருத்து என்றுதெரிவித்த திரு. நாராயணன் இலங்கை அரசுக்கும் தமிழர் பிரதிநிதிகளுக்குமிடையே சமரச உடன்பாடுஒன்றின் மூலம் தான் பிரச்னைக்கு நீண்டகால தீர்வுகாணமுடியும் என்றும் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் பயங்கரச்செயல்கள் குறித்து இந்திய அரசு கவலை கொண்டிருப்பதாகவும் தெரிவித்த திரு. நராயணன் அமைதியான அரசியல் தீர்வொன்

(4ம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்.கோட்டை முகாம், காரைநகர்கடற்படை மீது தமது மக்கள் விடுதலைப் படை படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் குறித்து ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளதாவது:-

''கோட்டைஇராணுவமுகாமிலிருந்து நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்துக்கும், மோட்டார் ஷெல் தாக்குதலுக்கும் பதிலடி கொடுக்கு முகமாக மக்கள்விடுதலைப் படையினரால் கோட்டை முகாமை நோக்கி மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

மக்கள் விடுதலைப்படையின் மோட்டார் ஷெல் கோட்டை முகாமுக்குள் விழுந்து வெடித்ததில் மூன்றுக்கு மேற்பட்ட அரச படைகள் கொல்லப்பட்

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஹொண்டா (HONDA M B. 8) 86 ஸ்ரீ விற்பனைக் குண்டு. ம. சிலுவைராசா, 234 (76), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C 3748]

புதிய உழவு இயந்திரப் பெட்டி ஒன்று விற்பனைக் குண்டு. தொடர்பு: இல: 32, சீனிவாசகம் வீதி, கொட்டடி. யாழ்ப்பாணம். [C 3756]

இறக்குமதி செய்த மீன் சாப்பாடு[Fish Max] மொத்த மாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M. 777, K K S. Road, and 208, 1st Cross St. Jaffna Telephone 22611. (A 920)

Singer தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, கதிரைகள், ஹோல் செற், Play Pen. Cot, சில்வர், பித்தளை பாத்திரங்கள், கிளாஸ் வகைகள். றேடியோ, T. V, Show Case, கண்ணாடி மேசைகள், கட்டில் மெத்தைகள், Filter. அல்மாரி, National Blender, Volkswagen கார், மின் கேற்றல், கமரா, மின்விசிறி, நவீன தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், மாவடிச் சந்தியருகில். [C 3681]

### தேவை

பேக்கரி தொழிலில் தேர்ச்சி உள்ளவர்களும், டிலிவரி செய்யக்கூடியவர்களும், பிஸ்கற் வகைகள் கட்டிங் செய்யக் கூடிய அனுபவம் உள்ள பெண் பிள்ளைகளும் தேவை. தொடர்பு கொள்ளவும்: ''ஹெமி பிஸ்கற் தயாரிப்பு நிலையம்'', சபாபதி வீதி, தலையாளி, கொக்குவில். (C 3746)

60 வயதுப் பெண்ணுக்கு நல்லூர்சுற்றுடலில் சாப்பாடு, Comode [கொமோட்] வசதியுடன் ஒரு அறை தேவை விளம்பர இல: C3764, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 3764]

### வகுப்புகள்

Electronic Engineering Radio and T. V (Antenna, Deck), வெல்டிங் வயறிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆரம்பமாகவுள்ளன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும் வெளிநாடு செல்பவர்களுக்கு விரைவில் Courses முடிக்கப்படும். Vispa Engineering Aid Hall, (ஆனைப்பந்திச் சந்திக்கருகாமையில்), 328, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். [C 3759]

### மணப்பந்தல்

கனடாவில் வாழும் 25 வயதுப் பெண்ணுக்கு இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவ மணமகன் தேவை. தொடர்பு: சகாயர் திருமண சேவை, புதுவாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை. [C 3761]

கனடாவில் வங்கியில் பணிபுரியும் 30 வயது வாலிபருக்கு 26 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. ஆங்கிலம் பேசக்கூடியவரும் தட்டெழுத்து தெரிந்திருப்பவரும் விரும்பத்தக்கது தொடர்புகொள்க: சகாயர் திருமணசேவை, புதுவாழ்வு நிலையம், ஆனைக் கோட்டை. ]C3760]

---

## A Boon to Diabetic Patients

**DIABETIC BROWN BREAD** — தவிட்டுப் பாண் இப்பொழுது விற்பனையாகின்றது.

Now available

ALSO YOUR FAVOURITE CURRANT LOAF.

Stockists:

CITY MEDICALS, [சிற்றி மெடிக்கல்ஸ்] Hospital Road, Jaffna.

BHARATH TRADES, [பாரத் டிரேட்ஸ்] Hospital Road, Jaffna. [Adjoining Eric-Rajapakse Opticians]

Made By:
PEDRUPILLAI'S PREMIER BAKERY,
73, Main Street, Jaffna.
T. P: 22644. Estd: 1865

AWAIT ANOTHER FIRST BY PREMIER'S — PUFF PASTRIES AND SAVOURIES

[C-3722]

---

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி
★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND)
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்து கொடுக்கப்படும்.

## INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

(A-787)

---

## அரிய சந்தர்ப்பம்



பலரின் வேண்டுகோளுக்கிணங்க மானிப்பாயில் மீண்டும் சலுகைக்கட்டணத்தில்

### Computer Programming and Data Processing

### Basic Language

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்:- 2-8-1986

TIME TABLE:-
சனி, ஞாயிறு 9 a. m. – 11-30 a. m.

மொத்தக் கட்டணம்:- 750/- மட்டும்

சேரும்பொழுது செலுத்தவேண்டியது:- 500/- மட்டும்

ஒவ்வொரு மாணவருக்கும் சிறந்த கம்பியூட்டர் செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு பாடத்திற்கும் அச்சிட்ட தமிழ் மொழிபெயர்ப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

நேரில் வரவும்:-

**UNIKCO COMPUTER CENTRE**

(சுதுமலைச் சந்தி)
282, யாழ்ப்பாணம் றோட், மானிப்பாய்.

[C-3763]

---

## BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
156/3, Stanley Road, JAFFNA

### G. A. Q. 87
### பொருளியல்

S. வரதராஜன்

ஆரம்பம்: 2-8-86 சனி 1.30 p.m.

(முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்) (A 1016)

---

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ கனடா

நேரடியான உடனடிப் பிரயாணம்

நாளுக்கு நாள் பயணமாகிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

குவைற்
டிரைவர் [Driver], பணிப்பெண்

சவுதி அரேபியா
கிளினேர்ஸ்

உடனடி பிரயாண ஒழுங்கு செய்துகொடுக்கப்படும். அத்துடன் பாஸ்போட், பொன்ட், விசா, ரிக்கட்டிங் என்பனவும் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

## Group Atlantic Travels

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக]

V. M Balasingam
HOTEL ORCHID INN,
571/6, GALLE ROAD,
WELLAWATTE, COLOMBO-6.
T. P. 583916 A 1004

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## புதிய மாணவர் அனுமதி
### 1986/1987

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலை, விஞ்ஞான மருத்துவ பீடங்களுக்கு புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான தகுதிகாண் பரீட்சை இப்பல்கலைக்கழகத்தில் ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி காலை 10-00மணிக்கு நடைபெற உள்ளது. பரீட்சைக்குவரும் மாணவர்கள் தத்தமது தேசிய அடையாள அட்டையையும் அனுமதிக்கடிதத்தினையும் தவறாது கொண்டுவருமாறு வேண்டப்படுகின்றனர்.

தகுதிகாண் பரீட்சையை அடுத்து ஆகஸ்ட் மாதம் 11ம் திகதியிலிருந்து ஆங்கில துரிதபயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு புதிய மாணவர்களின் பதிவுகள் மேற்கொள்ளப்படும். பதிவு செய்வதற்காக வரும் மாணவர்கள் தம்முடன் கொண்டுவர வேண்டியவை:-

1. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்.
2. பாடசாலை விடுகைப்பத்திரம்
3. பாஸ்போட் அளவிலான 7 புகைப்படங்கள் [2''X2'']
4. தேசிய அடையாள அட்டை.

பதிவுக் கட்டணங்கள்:

[அ] கலைப்பீடத்திற்கு சேர்க்கப்படும் மாணவர்கள் தமது பதிவுக்கட்டணமாக ரூபா 60/-இனை தபாற் கட்டளையாகவோ அன்றி காசுக்கட்டளையாகவோ ''நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்'' என்ற பெயருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

[ஆ] புவியியலை ஒரு பாடமாக எடுக்கும் கலைப்பீட மாணவர்களும், விஞ்ஞான, மருத்துவபீட மாணவர்களும் பதிவுக் கட்டணமாக ரூபா 110 இனை தபாற் கட்டளையாகவோ அன்றி காசுக்கட்டளையாகவோ ''நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்'' என்ற பெயருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

| பாடநெறி | பதிவுசெய்யும் திகதி | நேரம் |
| --- | --- | --- |
| கலை | 12-08-86 | 1-30 — 4-00மணி |
| வர்த்தகமும் வியாபார நிர்வாகமும் | 13-08-86 | 1-30 — 4-00மணி |
| விஞ்ஞானம் | 14-08-86 | 1-30 — 4-00மணி |
| மருத்துவம் | 15-08-86 | 1-30 — 4-00மணி |

பதிவாளர்.

[A-975]

### மணிவாக்கு

உணவில் பொதுமையுடன் இரத்தம் சிந்தாது புனிதமான அன்புறவால் உயிரினங்கள் யாவும் பிணைக்கப்பட்டிருப்பின் இவ்வுலகம் எத்தனை அழகாய் இருக்கும.

— எட்வின் ஆர்னல்ட்

# சுவாமி சிவானந்த மகரிஷி பாரதத்தின் இமாலயம்

மனிதகுல மேம்பாட்டுக்காக 76 வயதுவரை வாழ்ந்து அறியாமை என்னும் கொடிய இருளில் தட்டுத்தடுமாறிய கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் ஞான ஒளியை ஏற்றியவர் சுவாமி சிவானந்தர்.

பந்தமடையில் பிறந்த சிவானந்தர் எட்டயபுரத்தில் வளர்ந்து, தஞ்சையில் தழைத்து,மலாய்நாட்டில் மலர்ந்து, வடநாட்டில் காய்த்து, ரிஷிகேசத்தில் பழுத்து விதை தூவி, இன்று உலகிற்கெல்லாம் கர்மயோக நிழலும், பக்தியோக மலரும், ஞானயோகக் கனியும் அளிக்கும் யோகவேதாந்த சோலையாக வாழ்ந்துகாட்டி, புத்தர், சங்கரருக்குப் பிறகு பாரதநாட்டு அத்யாத்மஞானத்திற்கு புகழைத் தேடிக்கொடுத்தார்.

சிவானந்தரை நினைத்தால் இமாலயம் எம் கண்முன்னே தோன்றுமளவிற்கு தெய்வ ஜீவனத்தைச் சாதாரண மக்களுக்குப் படிப்படியாக விளக்கினார்.

சிவானந்தரின் உள்ளம் தூய்மையானது. கருணை நிரம்பியது. மகாசாத்வீகியாக சத்தியவானாக விளங்கிய இவரது வாழ்க்கைநெறி தனித்துவமானது, இவரது உபதேசங்கள் மனிதகுல வாழ்வைச் செம்மைப்படுத்தக்கூடியன. இவர் அருளிய சாதன தத்துவம் முப்பத்திரண்டும் முப்பத்திரண்டு கட்டளைகளாக மிளிர்கிறது.

இவரது சாதன தத்துவத்தில், உடல்நலப் பயிற்சி, சக்திப் பயிற்சி, நீதிப் பயிற்சி, உள்ளப் பயிற்சி, நெஞ்சப் பயிற்சி, மனனப் பயிற்சி ஆத்மப் பயிற்சி ஆகிய ஏழு பயிற்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

''ரொன்'' கணக்கில் பேசப்படும் கொள்கைகளைக் காட்டிலும் ''ஒரு அவுன்ஸ்'' நடைமுறைப் பயிற்சி மிகவும் நல்லது என்று சிவானந்தர் கூறியிருப்பது சிந்தனைக்குரிய விடயம்.

[இன்று சுவாமி சிவானந்தர்ன் நினைவு தினமாகும்.]

இன்று மரணங்கள் சர்வ சாதாரணமாகிவிட்டன. இயற்கை மரணங்களிலும் பார்க்க செயற்கை மரணங்களே அதிகம். இன்றைய மரணங்களுக்கும் சிவானந்தர் அன்று கூறிய ''மரணம் ஒவ்வொரு நொடியிலும் உனக்



காகக் காத்திருக்கிறது'' என்ற கருத்து சகலருக்கும் பொருந்தும். ஆகையால், உன் கடமைகளைச் செய்யத் தவறாதே, என்று கூறிய உபதேச மொழிகள் இன்று எவ்வளவு பொருத்தமாகவுள்ளது என்பதை அவதானிக்கலாம்.

''உன்னுடையகொள்கைகள், லட்சியங்கள் இவற்றில் உறுதியுடனிருந்து பலனை எதிர்பாராது உன் கடமையைச் செய். இறைவன் உனக்கு அருள்புரிவார்'' என்று சிவானந்தர் கூறிய கூற்று இன்றைய எமது வாழ்வில் எத்தகைய உண்மையைப் பிரதிபலிக்கக்கூடியதாக உள்ளது.

இன்று எம்மத்தியில் ஏமாற்றுப் பேர்வழிகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். வீண் பேச்சு பேசுபவர்கள், மற்றவர்களைப் பற்றிக் குறை கூறுபவர்கள் அவதூறு பசுபவர்கள் மற்றவர்களுக்குத் தீங்கு செய்பவர்கள் என்று எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேரும் இவற்றைக் கைவிட்டு அளவாகப் பேசி அன்பாக இருக்க வேண்டுமென்பது சிவானந்தரின் விருப்பம்.

எம். வாமதேவன்

மனிதன் தெய்வீக வாழ்க்கையை அமைத்துக்கொள்ள அன்பு, தூய்மை, சத்தியம் ஆகிய மூன்றையும் கடைப்பிடிக்கவேண்டும் எளிமையான வாழ்க்கையை நடத்தி உண்மையைப் பேசி எல்லோரையும் நேசித்து சகல காரியங்களிலும் நேர்மையாக இருந்தால் தெய்வ தரிசனம் கிடைக்கும் என்பது சிவானந்தர் அருள்வாக்கு.

ஓம் கருணையும் அன்பும்
நிறைந்த இறைவா!
உனைத் தொழுது
வணங்குகின்றோம்;
நீ எங்கும் உள்ளாய்.
எல்லாம்
வல்லாய் எல்லாம்
அறிவாய்;
நீ ஸச்சிதானந்தப் பொருள்
மெய்ப்பொருளும்.
மெய்யறிவும்,
பேரின்பமும் நீயே; எல்லா
உயிர்களிலும் உறைபவன்
நீயே.

# நமது நோக்கு

## ''சகல தமிழரையும் கொன்றுவிட கோரிக்கை!''

இனப்பிரச்னைத் தீர்வுக்கு எத்தனையோ வழிமுறைகளைப் பலரும் வெளியிட்டு வருகிறார்கள். அவைகளில் ஒன்றுதான் பிரச்னைக்கு காரணமாக உள்ள தமிழ்மக்கள் அனைவரையும் கொன்றொழித்துவிடுவதென்பது.

ஜனதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவுக்கு சிங்களப் பொதுமகன் ஒருவர் இப்படிக்கடிதம் எழுதியுள்ளாராம். களனியில் அண்மையில் ஒருகூட்டத்தில் பேசும்போது திரு. ஜெயவர்த்தனவே இந்தத் தகவலை வெளியிட்டார்

''அது தவறானது'' என்று கூறிய ஜனதிபதி ''செய்வதர்குக் கஷ்டமானது'' என்றும் ஒப்புக்கொண்டார். ''அவ்வாறு செய்தால் சிங்களவர்களே பெரிதும் கஷ்டமடைவார்கள்'' என்றும் உணர்த்தினர்.

இந்த மாதிரியான முயற்சிகள் தோல்விகண்டதின் விளைவாகவே மாகாணசபைகள் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளனவா? என நமது வாசகர் கேட்பது இயற்கை.

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானல் அவர்களின் மொழியை அழிக்க வேண்டும் என சிலர் கருதுகிறார்கள். ஆனல் உலக நடை முறையைப் பார்க்கையில் மொழியை அழிப்பதென்பது அவ்வளவு சுலபமல்ல. மொழியில்லாத இனங்களும் உண்டு. ஆதியில் மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ள லதீன், சமஸ்கிருதம் போன்ற மொழிகளைப்பேசும் மக்களை இன்று காணேம். அம்மொழிக்குரிய மக்கள் ஒரு தனிஇனமாக இன்று அறியப்படுவதில்லை எனருலும் அம்மொழிகள் இன்றும் வாழ்கின்றன.

எனவே மொழியை அழித்து இனத்தை அழிப்பது சாத்தியமில்லை.

மேற்குலகின் அரசியல் சாணக்கியனை கிரேக்க நாட்டு மாக்கியவல்லியின் சிந்தனைப்படி சிறுபான்மை இனம் ஒன்றை அழிப்பதாயின் அதற்கான இலகுவான வழி அம்மக்கள் வாழும் பிரதேசங்களில் பெரும்பான்மையினரைக் குடியேற்றுவதும் அதற்சேற்றாற்போல் அரசனின் படைபட்டாளங்களை அப்பிரதேசங்களில் நிறுத்துவதுமாகும்

இதனல் என்ன நடக்கும் என்றால் அச்சத்தில் குடிபெயர்பவர்கள்போக சிறுபான்மையினரின் மொழி, கலை, கலாசாரம் மதம்போன்ற அவர்களைத் தனித்துவமாகக் காட்டும் அம்சங்கள் மீது படிப்படியாக பெரும்பான்மையினரின் சாயல்படிய ஆரம்பிக்கும், மெதுவாக அவர்களின் மேலாதிக்கத்தில் இவை கலப்படமாகி காலப்போக்கில் பெரும்பான்மையினரைச் சார்ந்த ஒரு பிரிவினராக அம்மக்கள் மாறிவிடுவார்கள்.

இந்த உண்மையை சிங்களத்தலைவர்கள் அறிந்துதான் மிக இலகுவாக வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுமாப்போல் தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றங்களை திட்டமிட்டு செயல்படுத்திவந்துள்ளார்கள்.

தமிழ்மக்கள் இலங்கையில் சிறுபான்மையினர் என்றாலும் உலகளவில் டன்மடங்கு பெரும்பான்மையாம் இருப்பதாலும், இவர்களின் கலை கலாசாரப் பாரம்பரியங்கள் இங்குள்ள பெரும்பான்மையினரின் அதே அம்சங்களைவிட பழமையும் இலகுவில் விழுங்கப்படமுடியாதவையாகவும் இருப்பதாலும், மட்டுமின்றி திட்டமிட்ட குடியேற்றங்களால் ஏற்பட்டு வரும் சீரழிவுகள் குறித்து காலம் தாழ்த்தியாகிலும் விழித்துக்கொண்டதாலும் தமிழினம் இன்று தனது உரிமைகளுக்காகப் போராடக்கூடிய நிலையில் இங்கு இருக்கின்றது.

எனவே தமிழ்மக்களை அழித்தொழிக்கும் விடயம் இன்று ஒரு கடிதத்தின் மூலம் யாரோ எடுத்துக் கூறித்தான் தெரியவர வேண்டும் என்பதில்லை.

ஆனல் திட்டமிட்டமுறையில் தமிழ்ப் பிரதேசங்களை அபகரிக்கும் முயற்சிகள் 1948ம் ஆண்டுக்குப் பின்பே ஆரம்பித்தன.

அண்மையில் போரதனைப் பல்கலைக் கழகத்தில் ஓர் நிகழ்ச்சியில் பேசியபோது; அ. இ. த. காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் (குமார்) இந்தக்குடியேற்றங்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்னையானது அரசாங்க உதவியுடனன குடியேற்றத் திட்டங்களையடுத்து அதாவது, தமிழர்களின் பாரம்பரியதாயகத்தில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் 1948ம் ஆண்டிலிருந்து வடக்கு கிழக்கு மாகாணங்கட்கு வெளியே வாழும் சிங்கள மக்களைக் கொண்டுவந்து குடியேற்றியதுடன் ஆரம்பித்தது. அத்தகைய குடியேற்றங்கட்கு அரசாங்கம், காணிகள், நிதி ஆகியவற்றை வழங்கி வீடுகளைக் கட்டி தொடர்ந்து செயற்படுத்தியது''

எனவே சுதந்திரத்துக்குப்பின் இதுவரை காலமும் பதவியிலிருந்த அரசாங்கங்கள் படிப்படியாக எடுத்து வந்துள்ள நடவடிக்கைகளும், காலத்துக்குக் காலம் பேரினவாதிகளால் கட்டவிழ்த்துவிடப்பட்ட இரத்தக்களரிகளும் அவைகளின் விளைவாக எழுந்துள்ள தமிழ் இளைஞர்களின் தீ விரவாதமும், இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் குண்டு வீச்சுக்கள், விமானத் தாக்குதல்களும் போராட்டங்களும் நமக்கு நினைவுறுத்துவது யாதெனில்;

இந்த நாட்டின் இனப்பிரச்னையை அன்றாடம் நடத்தப்படும் படுகொலைகளால் தீர்த்துவிட முடியாது. தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு ஒன்றே அமைதிக்கான அடிப்படை மார்க்கமாகஇருக்கமுடியும் என்பதே.

## இன்று உற்சவாரம்பம்

யாழ்ப்பாணம், புதன்.

வண்ணைவீரமாகாளிஅம்மன் கோவில் துர்க்கை அம்பாள் அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறும். [அ]

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் மத்தி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரிஅம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் விமர்சையாகக் கொண்டாடப்படவுள்ளது. இன்று ஆரம்பமாகும் இவ் அலங்கார உற்சவம் அபிஷேக, ஆராதனைகளுடன் தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறும் [எ]

## ஆடிப்பூர விழா

யாழ்ப்பாணம் - புதன்

கோப்பாய் பழைய வீதி அருள்மிகு விரபத்திரர் ஆலய பத்திரகாளி அம்பாள் ஆடிப்பூரவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறும்.

அடுத்தமாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் திருவீதிஉலாவும் இடம்பெறும் [ச]

## தையல்நாயகி திருப்பள்ளி எழுச்சி

விண்ணகத்தே செம்பரிதி ஓவியங்கள் தீட்ட
வியனுலகம் இருட்போர்வைதனை மெல்ல நீக்க
வண்ணமலர்த் தேனுண்டு வண்டுகவிபாட.
மயிற்கூட்டம் தோகைவிரித்தே இனிதின்ஆட
வண்ணையெனும் புனிதநகர் தனிற்கோயில் கொண்ட

வாலாம்பிகைத்தாயே தையல் நாயகியே
விண்ணமுதே விளங்கொளியே வேண்டுமடியார்தம்
வினைதீர்க்கும் பெருங்கடலே பள்ளி எழுந்தருளாய்

ம. பார்வதிநாதசிவம்

இன்று வண்ணை தையல்நாயகி அம்பாள் கொடியேற்றம்.

## 'அரசியல் தீர்வையே அரசு காணவேண்டும்'

கொழும்பு, செவ்.

''இனப்பிரச்னைக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது எதிர்ப்புகள், பயமுறுத்தல்கள் வரும். எனினும் அவற்றைக் கண்டு அஞ்சாமல் அரசு துணிந்து செயற்படவேண்டும். அரசியற் தீர்வு காண்பதிலிருந்து அரசு ஒருபோதும் பின்வாங்கக் கூடாது''.

இவ்வாறு கலவானை எம்.பி. திரு. டியூகுணசேகரா பாராளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புக்கான பிரேரணையில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''இனப்பிரச்னைக்கு அரசியற் தீர்வு காண்பதற்குக் கடந்த சில வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம். ஒரு புறத்தில் அரசியல்கட்சிகள் பிரச்னை தொடர்பாக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது மறுபுறம் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசுடனும் ஏனைய அரசியற் கட்சிகளுடனும் தனித்தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

''இவ்வாறான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்போது பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படு

(5-ம் பக்கம் பார்க்க)

## இன்று கார்த்திகைத் திருவிழா

யாழ்ப்பாணம், புதன்.

வரலாற்றுப் பெருமை பொய்ந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருவிழாக்கள் வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றன. வழமைபோல் இவ்வாண்டும் பக்தர்கள் பெருந்தொகையாக விழாவைத் தரிசிக்கின்றனர்.

இன்று திருக்கார்த்திகைத் திருவிழா இடம்பெறுகிறது.

## தவறிவிட்டது

5-7-86 அன்று ஆனைக் கோட்டைக்கும் கல்வியங் காட்டிற்கும் இடையில 631470645 V இலக்கமுடைய அடையாள அட்டை தவறி விட்டது. கண்டெடுத்தவர் கள் கொக்குவில் தனியார் மினிபஸ் சங்கம் கொக்குவி லில் ஒப்படைக்கவும். சன் மானம் வழங்கப்படும். (C3766)

### பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

காலஞ்சென்ற வயித்தி லிங்கம் சிவராசாவின் மரணசாதனமில்லாத சொத்துக்கள் சம்பத்து கள் சம்பந்தமாக

- மரணமெய்திவர் சிவராசா கைம்பெண் சாந்தகுமாரி கரவெட்டி மேற்கு.

மனுதார்

இல. T/1215

எதிர்

1. சிவராசா மிகிந்தலா
2. சிவராசா பிரிந்தா, கரவெட்டி மேற்கு.

பிரதிவாதிகள்

3. தம்பையா சிதம்பரப் பிள்ளை கரவெட்டிமேற்கு.

1ம் 2ம் பிரதிவாதிகளின் பாதுகாவலர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும்மேற்சொல்லப்பட்ட பராயமடையாத 1ம், 2ம்பிரதிவாதிகளின் பாதுகாவலராக 3ம் பிரதிவாதி நியமிக்கப்படுவார் என்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் வருடம் புரட்டாதி மாதம் 19அம் திகதி மு.ப 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப் படுகின்றனர்.

1986ம் ஆண்டு ஆடி மாதம் 14ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி, சண்முகம் நடராசா பதிவாளர்

வரைவு:

பெ. செ. பாலசிங்கம், மனுதாரின் சட்டத்தரணி.

C 3698


லிடோ

காலை 10-30, 2-30, 6-30

பாக்கியராஜ்-சரிதா நடித்த

மௌனகீதங்கள்

(கலர் - புதிய பிரதி)

எமது அடுத்த வெளியீடு

புதுமைப் பெண்

(புதிய பிரதி)

வெலிங்டன்

வெண்திரையில்

10-30, 2-30, 6-30

இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த

சிவாஜி, ஜமுனா வீரப்பா, நம்பியார்

தங்கமலை ரகசியம்

(புத்தம் புதிய பிரதி) இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.


### இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், புதன் சுன்னாகம் ஸ்ரீ கதிரவேலச் சிவன் - சுவர்ணாம்பிகைத்தேவி ஆடிப்பூர மகோற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

அடுத்தமாதம் 4-ம் திகதி சுமங்கலித்திருவிழாவும் 7-ந் திகதி தேர்த்திருவிழாவும் 8-ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும் (ச)

### சுவாமி சிவானந்த

[3ம் பக்கத் தொடர்ச்சி]

வது கவலைக்குரிய விடயமாகும். இத்தகைய செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

"இவ்வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியிடமும் ஆயுத மேந்திப் போராடுபவர்களிடமும் நாம் ஓர் வேண்டுகோளை விடுக்கின்றோம். இனப் பிரச்னையைச் சமாதானமாக அரசியல் தீர்வுமுறையில் ஐக்கிய இலங்கையுள் தீர்க்க உங்களது சகல ஒத்துழைப்பையும்வழங்க வேண்டும்." [இ-எ]

### காயமடைந்தோர் விபரம்

யாழ்ப்பாணம், புதன். யாழ் கோட்டை இராணுவத்தினரால் நேற்று முன்தின இரவு மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலால் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் விபரம்: எஸ். கமலேசன் (வயது 24) அன்னசத்திரம், ரி. மார்க்கண்டு (வயது 60) ஆரியகுளம் எஸ். சலீம் (வயது 21) மட்டுவில் எஸ். கணபதி (வயது 37) பிரப்பங்குளம், எஸ் ரஞ்சன் வயது 22) அன்னசத்திரலேன். (ஈ-இ)

### ஒருதலைபட்ச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கான முயற்சிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் அவற்றை கெடுக்கும் விதத்தில் எவ்வித வன்முறைகளும் இடம்பெறக் கூடாது என்றும் தெரிவித்தார் (ஒ-இ)


## WANTED

1. Surveying Equipment: Theodorlite, levels, chains, tapes, staff etc., for teaching field work.
2. Part-time instructor in "Electric Motor winding". Contact immediately

DIRECTOR,

Jaffna College Tech. Institute, Vaddukoddai.

(A 976)

## 88 III-ம் பிரிவு

### A/L வகுப்புக்கள் ஆரம்பம் 02-08-1986 சனி காலை 9-30மணி

| | | | |
|---|---|---|---|
| PHYSICS | — | 9-30 | 10-30 |
| CHEMISTRY | — | 10-30 | 11-30 |
| ZOOLOGY | — | 11-30 | 12-30 |
| BOTANY | — | 12-30 | 01-30 |
| PURE and APPLIED MATHS | — | 11-30 | 01-30 |

விபரங்கட்கு:-

NEW MASTER INSTITUTE

B M. C. LANE, JAFFNA.

[A-1007]

# HOTEL GNANAM'S

(Under new Management)

Relax at the Beer Garden



★ ENJOY THE BEST CHINESE MEALS
★ HOT AND COOL DRINKS
★ LUNCH AND SHORT - EATS

Etc. Etc. Etc. Etc.

Open from 9-30 a. m. to 11-30 p. m. Daily

299, CLOCK TOWER ROAD, JAFFNA,

WHERE OUR STANDARDS ARE HIGH.

Telephone: 22082 — 23067

(A 1017)


### யாழ்.கோட்டை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தையும் யாழ். நீதவான் நீதிமன்றதையும் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி எஸ்.

### ஈ. பி. ஆர். எல். எவ்.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டனர்: பலர் படுகாயமடைந்தனர்.

### காரைநகர் தாக்குதல்

காரைநகரில் தமது இயக்கத்தால் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

"நேற்று முன்தினம் நண்பகல் காரைநகர் கடற்படையினர் வந்த மூன்று பிரங்கிப் படகுகள் மீது மக்கள் விடுதலைப் படையினரால் மோட்டார் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இத்தாக்குதலினால் கடற்படை பிரங்கிப் படகு ஒன்று சேதமடைந்தது மக்கள் விடுதலைப் படையின் மோட்டார் ஷெல் தாக்குதலால் கடற்படையினர் சிலர் கொல்லப்பட்டனர் ஏனையோர் மோட்டார் ஷெல் தாக்குதலைக் கண்டு படகுகளில் இருந்து குதித்து நீந்தியபடி முகாமை நோக்கி தப்பிச் சென்றனர்." (மா)

### புலிகள்...

1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனை முறியடிக்கும் முகமாக எமது தரப்பினர் கோட்டை முகாம் மீது இரவு மோட்டார் தாக்குதல் நிகழ்த்தினர். இத் தாக்குதலில் இருவர் கொல்லப் பட்டதாகவும், 3பேர் படு காயமடைந்ததாகவும் அரசாங்கம் அறிவித்திருந்தது தெரிந்ததே. காயமடைந்தவர்களில் முகாம் பொறுப்பதிகாரியும் அடங்குவர்."

### திருகோணமலையில் கண்ணிவெடி

இதேவேளை திருகோணமலை மாவட்டத்திலுள்ள முதலாம் கண்டம் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தரைக்கண்ணிவெடிச் சம்பவத்திற்கு உரிமை கோரி விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"திருகோணமலைமாவட்டத்திலுள்ள பன்குளம் இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 3 மணியளவில் 2 ஜீப் வண்டிகளிலும், ஒரு றக்விலுமாக சுமார் 50 ஆகாயப்படையினர் மொரவேவ பொலிஸ் - இராணுவ கூட்டு முகாமுக்கு ரோந்து செல்லும் சமயம் முதலாம் கண்டம் என்னுமிடத்தில் ரோந்துப்படையினர் வந்துகொண்டிருந்தபோது எம்மவர்கள் தரைக்கண்ணி வெடியினை வெடிக்கச் செய்ததில் ஜீப் வண்டியொன்று முற்றாகச் சிதைந்தது; அதில் இருந்த அனைவரும் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின்போது எமது தரப்பில் எதுவிதமான இழப்புகளும் இல்லை." [மா]

ஆனந்தக்குமாரசாமி யாழ். மாவட்ட நீதிபதி வி. ஜெகசோதி யாழ் நீதிவான் எஸ், நாகராசா ஆகியோர் பார் வையிட்டனர். [ச-இ]

### அபினுடன் வந்த பெண் கைது

வவனியா, செவ் மூன்றேமுக்கால் லட்சம் ரூபா பெறுமதியான அபின், பெண் ஒரு ரிடமிருந்து கைப் பற்றப்பட்டுள்ளது.

வவனியா செயலகத்தின் முன்னால் உள்ள தடை முகாமின் நேற்று முன்தினம் இடம் பெற்ற சோதனையின்போது பஸ்ஸில் இருந்த பெண் ஒருவர் மூன்றேமுக்கால் கிலோ நிறையுள்ள அபின் வைத்திருந்ததைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் (மா. இ)

### சுபநேரம்

யாழ்ப்பாணம் புதன் பரணி, திருவோணம், விசாகம், அஸ்தம் இந்த நட்சத்திரங்களின் நாலாம் பாதமும் கடகராசியும் கூடிய காலத்தில் ஒருசிட்டு மண்ணின்முல் பூமி பலிதமும், நாமிருக்கும் நடு எமதாகும் நிஜயமும் உண்டு இந்தநேரம் இன்று 30ந் திகதி காலை5-30க்கும் 5-59க்குமிடையில் ஏற்படுகின்றது.

இந்நேரத்தில் ஒரு சிட்டிகை மண்ணைத்தின்று. நவக்கிரக வழிபாட்டில் ஈடுபட்டால் பூமி பலிதம்மண்காக்கப்படல் நிலை பெறல் உண்டென விருதுப் பட்டி ஸ்ரீமான் இராமலிங்கக் குருக்களார் எழுதப்பட்ட சோதிடக்கிரக சிந்தாமணி சொல்கிறது. (ஔ)

### காங்கேசன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

முன்பு இராணுவத்தினர் துறைமுகப்பகுதிக்கு வந்து சில மணிநேரம் கண்காணித்து விட்டு பின்னர் காங்கேசன் துறை இராணுவ முகாமுக்கு திரும்பினர். ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பகல் முழுவதும் அங்கு இராணுவத்தினர் காவலுக்கு நிறுத்தப் பட்டுள்ளனர் இ)

### சல்பில்ல...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு அங்கு தங்கி நின்ற காடையர் கோஷ்டியே, மலையகத் தமிழரின் லயனுள்புகுந்து தாக்குதல் நடத்தினராம்.

அகதிகளாக்கப்பட்ட 12 குடும்பங்களுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சில உதவிகளைச் செய்துள்ளது. அரசாங்கமோ ஐ. தே. க. தோட்டத் தொழிற்சங்கமோ இதுவரை இச்சம்பவம் குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட தொழிலாளர் கவலையடைந்துள்ளனர்.

கண்டியிலிருந்து 5 மைல் தூரத்தில் இத் தோட்டம் உள்ளது. (மா)


## வீடியோ புளொசம்ஸ்

உங்கள் இல்லங்களில் நடைபெறும் இனிய நிகழ்ச்சிகளை மிகச்சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்து மகிழ யாழ் நகரில் முதல்தரமான வீடியோ படப் பிடிப்பாளர்கள்:

### வீடியோ புளொசம்ஸ்.

எமது புதிய வெளியீடுகள்:

1. புதிர் — முரளி, சந்திரா (அறிமுகம்), ஆஷா.
2. கைதியின் வேட்டை — விஷ்ணுவர்த்தன், பவித்ரா, தேவிஸ்ரீ.
3. மனிதனின் மறுபக்கம் — சிவகுமார், ஜெயஸ்ரீ, ராதா, ராஜலட்சுமி.

வீடியோ புளொசம்ஸ் 30, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.

த வீடியோ புளொசம்ஸ் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(C-3774)

## "இன்றையதலைமுறையில் நன்றாக எழுதும் சிலரில் ஒருவர்"

யாழ்ப்பாணம், புதன்

"இன்றைய இளையதலைமுறை எழுத்தாளர்களில்மிகச் சிலரே மிக நன்றாக எழுதுகின்றவர்கள். அந்தமிகச் சிலரில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனும் ஒருவர். இதை நான்மட்டுமல்ல சமகால விமர்சகர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அவரின் முழுமையான ஆளுமையை பார்க்க வேண்டுமானல் அவரது சிறுகதைகளை பார்க்க வேண்டும். 1958ம் ஆண்டிலே அவரது பணி மிகச்சிப்பாக இருந்தது."

இவ்வாறு கலாநிதி இ. பாலசுந்தரம் இணுவையூர் சிதம்பரதிருச்செந்தி நாதன் "என்றாவது ஒருநாள்" என்ற குறுநாவலின் அறிமுக விழாவில் அறிமுகவுரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் தமது உரையில்:

"ஆசிரியரின்எழுத்தில் நல்ல முதிர்ந்தநிலை உள்ளது. அந்த முதிர்ச்சிக்கு இரண்டு காரணங்களைத் குறிபபிடலாம் ஒன்று இன்றைய அரசியர் பொருளாதார சமுகநிலையின் காரணமாக அவருக்கு உண்டான பாதிப்பு. அதில் அவர் கொண்ட ஈடுபாடு மற்றது அவரது கல்விப்புலம். சமூக பொருளாதாரம் பற்றி சிந்திக்காத எழுத்தாளன் நல்ல எழுத்தாளனாக இருக்க முடியாது" என்றார்.

மேற்படி விழா இணுவில் கலை இலக்கியவட்டத்தினரால் இணுவில் அமெரிக்கன்மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திரு. எஸ். சோதிப்பெருமாள், பண்டிதர் சபா ஆனந்தர் ஆகியோர் மங்கல விளக்கேற்ற பேராசிரியர் ப சந்திரசேகரம் தலைமை தாங்கினர்.

விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக பொருளியல் விரிவுரையாளர் திரு வி. பி சிவநாதன்தனது உரையில் "ஒரு நூல்சிறந்த நூல் என்பதுபற்றி முடிவு செய்வது ஒருசிறு சமுமாத்திரமல்ல ஒருமனிதனும் அல்ல. மக்களே அது சிறந்ததா? இல்லையா? என்பதைப் பற்றி தீர்மானிக்க வேண்டும். ஒரு நூலில் வர்க்கம் வர்க்கம் என்று தொடர்ந்து குறிப்பிட்டால்தான் சிறந்தநூல் என்பதல்ல. ஆனல் வர்க்க பார்வை இருக்கவேண்டும் ஏனெனில் ஒருவர்க்கப் பாதையில் இருந்துதான் ஒருசமூகத்தில் உள்ள மாற்றத்தினை அறிய முடியும். இந்தக்கதையில் தனிமனித பாத்திரங்களே குறிப்பிடும்படியாக இருக்கின்றது. எல்லாப்பாத்திரங்களும் வார்க்கப்பட்ட பாத்திரங்களாகவே இருக்கின்றன" என்றார்

கலாநிதி நா. சுப்பிரமணியன் தமது ஆய்வுரையில்;

"பல எழுத்தாளர்கள்தமது பெயரோடு ஊரின் பெயரையும் இலக்கிய உலகிற்கு கொண்டுவந்தார்கள். இவர் ஊரின் பெயரோடு தனது தகப்பனரின் பெயரையுப் கொண்டு வந்துள்ளார். இந்தக்கதையின் பாத்திரங்கள் தனிமனித பாத்திரங்களே அவற்றின் பின்னல் உள்ள வர்க்கம் பற்றி குறிப்பிடப்படவில்லை 1970ம் ஆண்டுக்குப்பின்னர் எழுகவந்தஎழுத்தாளர்களிடம் இக்குறைபாடு உள்ளது" என்றார்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் சிறப்புரை நிகழ்த்தினர். தேசிய கலை இலக்கிய பேரவையை சேர்ந்த திரு சோ. தேவராஜா, இணுவில் கலை, இலக்கிய வட்டத்தைச் சேர்ந்த நாகலிங்கம் சிவசிதம்பரம், கந்தையா சிறிகணேசன், நூலாசிரியர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் ஆகியோரும் பேசினர்

அண்ணா தொழிலக அதிபர் திரு. எஸ் பி. நடராசா உட்பட இணுவிலின் முக்கிய பிரமுகர்கள் நூலின் சிறப்பு பிரதிகளை வாங்கினர்கள்,

[ஆ]

## ஓய்வுபெற்ற அதிபர்

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த திரு சின்னத்தம்பி தம்பதிகளின் புதல்வரான ஆசிரியர் ஐயாத்துரை அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை நெடுநகரில் ஆரம்பித்து உயர்கல்வயைப் பூர்த்தி செய்தார். தமது 24 வது வயதில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்து 26 வது வயதில் ஆசிரியபயிற்சியில் ஈடுபட்டார் முதலில் குருணாகலை கிறிஸ்தவ ஆலயக் கல்லூரியில் 8 வருட சேவையை பூர்த்திசெய்து. தொடர்ந்து பொல்காவலை சி சி தமிழ் கலவன் பாடசாலையில் 6 வருடம் பதில் அதிபராகக் கடமையாற்றும்கால் பல கட்டிடங்களை அமைத்தும் பாடசாலை சிறார்களின் கல்வி ஊட்டத்திலும் பாடசாலைகளுக்கிடையிலன போட்டிகளிலும் முன்னேற்றம் அடையச்செய்தார். அதன்பின் அவரது சொந்த ஊரான நல்லூரில் ஒரு வருட காலம் பணிபுரியும் வாய்ப்புப் பெற்றார்.

தன்னலம் கருதா தமிழ்த் தொண்டுபுரியும் அவர் எல்லா மக்களும் சம கல்வி பெற வேண்டும் ன்ற ஆர்வத்தினால் கிளிநொச்சிக்கு தன்னை அற்பணித்த செம்மல் என்று கூறினல் மிகையாக.

கண்டாவளை அரசினர் வித்தியாலயத்தில் 9வருடம் அதிபராக இருந்தகாலை பாடசாலையின முன்னேற்றத்திலும் மாணவர் கல்வி முன்னேற்றத்திலும் பெற்றோர்களின் கூட்டு முயற்சியிலும் நல்ல செயலாளனாக விங்கினார்.

பின் கலைவெட்டி தி- மக்களின் அருந்தவ பய்ஞக நாகேஸ்வர .வித்தியாலயத்திலும் பணிபுரிந்தார். எமது பாடசாலையின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு பாடசாலை கட்டிடங்கள் அமைத்தும் ஆசிரியர்களுக்கானவிடுதியினை அமைத்தும் பொது நிலையம் என்டனவற்றை அவரது விடாமுயற்சியினல் எமக்கு பெற்றுத்தந்தம்தாடு மட்டும் அல்லாமல் எமது மாணவர் மூலம் எமது வித்தியாலத்துக்கு மட்டுமின்றி கிளிநொச்சி நகருக்கே புகழைத் தேடித்தந்துள்ளார்

இத்துணை சிறப்பு பெற்ற ஆசிரியர் ஓய்வுபெறுவது கல்வி உலகுக்கு பெரும் நஷ்டமென்றே கூறவேண்டும்,

ஓர் ஆசிரியர்

## மறடோனா இலங்கை வருவார்

கொழும்பு, செவ்.

உலகின் பிரபல உதைபந்தாட்ட வீரரான டியாகோ மறடோனா வெகுவிரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளாரனத் தெரியவருகிறது.

சர்வதேச விடமைப்பு ஆண்டாக அடுத்தவருடம் பிரகடனப்படுத்கப்பட்டிருப்பதையொட்டி நிதிதிரட்டும் உதைபந்தாட்டப்போட்டியொன்றில் கலந்துகொள்ளவுள்ளகுழுவொன்றுக்கு தலைமைதாங்கியே மறடோனா இங்குவருவார்எனத்தெரியவருகிறது.

டியாகோ மறடோனா ஆர்ஜென்டீனவைச் சேர்ந்தவர் என்பது தெரிந்ததே.

[ய-ஊ]

## வேலைவாய்ப்பு இல்லாததினல்— மலேசியா சென்ற 54 இளைஞர் நாடு திரும்பினர்

பண்டத்தரிப்பு, செவ்.

மலேசியா நாட்டில் வேலைவாய்ப்பை பெறுவதற்காக யாழ். நகரிலுள்ள முகவர் நிலையம் ஒன்றின் மூலம் சென்ற 54 இளைஞர்கள் அங்கு வேலைவாய்ப்பு பெறமுடியாத நிலையில் ஒருமாத காலம் அங்கு நின்று பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துவிட்டு இங்கு மீண்டும் திரும்பிவந்துள்ளனர்.

சில்லாலை, இளவாலை, சண்டிலிப்பாய், மானிப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த இந்த இளைஞர்கள் தலா 30 ஆயிரம் ரூபா செலுத்தி யாழ். நகரிலுள்ள பிரயாண முகவர் மூலம் மலேசியா நாட்டில் வேலைவாய்ப்பு பெறுவதற்காகக் கடந்த மாதம் சென்றனராம்.

மலேசியாவுக்கு சென்றடைந்ததும் இங்கு வைத்து பிரஸ்தாப ஏஜன்ட் கூறிய உறுதிமொழிக்குஇணங்க வேலைவாய்ப்பு எதுவும் பெற்றுக்கொடுக்கவில்லை என்றும் இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது.

சாப்பாட்டிற்குகூட வழியின்றி பலத்த கஷ்டத்தின் பின்னர் இவ்வாரம் இவர்கள் இங்கு வந்து சேர்ந்ததாகவும் இதுபற்றி மேலும் தெரிவிக்கப் படுகின்றது. (ஒள-இ)

## தொகுதிரீதியான அபிவிருத்தி வேலைகள்

மாவிட்டபுரம், செவ்.

தொகுதி ரீதியாக அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மேற்கொள்ளப்பட வேண்டியவேலைகள் குறித்து அடுத்தமாதம் 15-ம் திகதிக்கு முன் விபரங்களை சமர்ப்பிக்குமாறு யாழ். அரச அதிபரால் அபிவிருத்திச்சபை உப அலுவலகங்கள் கோரப்பட்டுள்ளன.

தொகுதி ரீதியாக ஒரு 15 லட்சம் ரூபா என்ற வகையில் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள யாழ். அபிவிருத்தி சபையால் 86-87 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியில் எந்தெந்த வேலைகளை மேற்கொள்வது என ஆராய்ந்து திட்டங்களை சமர்ப்பிக்குமாறு பிவிருத்திச்சபை உப அலுவலகங்களை யாழ் அரச அதிபர் கோரியுள்ளார்.

ஆகஸ்ட் 15-ம் திகதிக்கு முன் இவ்விபரங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளதால் திட்டங்களை தீட்டுவது குறித்து உப அலுவலக அதிகாரபளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அப்பகுதி பொது நல சேவா சங்கங்களை கூட்டி ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

மின்சார விநியோகம் சந்தை புனரமைப்பு, வீதிகள் திருத்தல். மயானங்கள் புனரமைப்பு போன்ற பல்வேறு வேலைகளுக்கு மேற்படி நிதியிலிருந்து பணம் ஒதுக்கீடு செய்யப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

## தெல்லிப்பழையில் சட்டவிரோத மின்பாவனை அகற்றப்பட்டது

மாவிட்டபுரம், செவ்.

தெல்லிப்பழை உப அலுவலக எல்லைக்குள் சட்டவிரோத மின் பாவனைக்கு உபயோகிக்கப்பட்ட பெருந்தொகையான மின் வயர்கள் கைப்பற்றப்பட்டு எரிக்கப்பட்டன.

மேற்படி உபஅலுவலக மின்சார அத்தியட்சகர் திரு. பொ. ஜெயரத்தினம் தலைமையில் மின்கம்பி இடுபவர் திரு. சி. வாமதேவன் மற்றும் மின்சார ஊழியர்கள் அடங்கிய கோஷ்டி மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையின் ஒருபகுதி ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் சட்டவிரோத மின்பாவனைகளை அகற்றுவதில் ஈடுபட்டனர்,

அச்சமயம் 150க்கு மேற்பட்ட சட்டவிரோத மின் பாவனை கண்டுபிடிக்கப்பட்டு துண்டிக்கப்பட்டதுடன் உப அலுவலக வளவில் வைத்து மேற்படி சட்டவிரோத மின் பாவனைக்கு உபயோகித்த மின் வயர்கள் தீயிட்டுகொளுத்தப்பட்டன.

சட்டவிரோத மின்பாவனையால் தெல்லிப்பழை உப அலுவலக எல்லைக்குள் இருக்கும் மாவிட்டபுரம் உபமின் நிலையம் எரியும் நிலையிலிருந்ததாகவும் சட்டவிரோத மின் இணைப்புகள் துண்டிக்சப்பட்டதால் அந்நிலை தவிர்க்சப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## வேம்படி பழையமாணவர் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் புதன்

யாழ். வேம்பாடி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப்பொதுக்கூட்டம் இன்றுபிற்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (சி)

## கல்விப் பொருட்காட்சி

வசாவிளான், செவ்வாய்

புன்னாலைக்கட்டுவன் அ. த. க பாடசாலையும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் இணைந்து நடத்தும் கல்விப் பொருட்காட்சி இன்று புதன் கிழமை காலை புன்னாலைக் கட்டுவன் அ த. க பாடசாலையில் நடைபெறும்.

மேற்படி பொருட்காட்சியின்போது கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஏ. வி தங்கராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (எ)

## உதைபந்தாட்டம்: சென். சாள்ஸ் சாம்பியன்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். கல்வி இலாகாவினல் யாழ். மாவட்டப் பாட சாலைகளிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்ட 'நொக் கவுட்' போட்டியின், 17-வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் சென் சாள்ஸ் மகா வித்தியாலயம் சாம்பியனுகத் தெர்வு செய்யப்பட்டுள்ளது.

சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்துக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சாம்பியன் மோதலில், சென் சாள்ஸ் வித்தியாலயம், சிறப்பாக விளையாடி 3—1 கோல்களால் வெற்றி பெற்றது

நேற்று யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு ஹிற்லர் மத்தியஸ்தம் வகித்தார்.

### இன்றைய மோதல்

19-வயதுப் பிரிவின் அரை இறுதிஆட்டம் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இம்மோதலில், யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதுகின்றன. (வி)

## "ஷெல் வெடித்தபோது இறந்தவர் வீட்டுக்குள் படுத்திருந்தார்"

யாழ்ப்பாணம் புதன்

"இறந்தவர் ஒரு வீட்டிலும் அவர் தந்தை மற்றொரு வீட்டிலும் படுத்திருந்தபோது முற்றத்தில் ஷெல் விழுந்து பலத்த சத்தத்துடன் வெடித்துச்சிதறியபொழுது இருவருக்கும்பலத்த காயமேற்டட்டது. இருவரையும் காரில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் போது சந்திரராசா வழியில் மரணமானர்."

யாழ். ஆரியகுளத்தைச் சேர்ந்த மார்க்கண்டு சந்திரராசாவின் (35 வயது) மரண விசாரணையில் சாட்சியமளித்த வே. கதிரமலை இவ்வாறு கூறினர்.

யாழ்.ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் யாழ். நீதவான் எஸ் நாகராசாமுன்னிலையில் நேற்றுக்காலை மரணவிசாரணை நடைபெற்றது.

வே.கதிரமலை மேலும் கூறியதாவது;

"இரவு வீட்டில் படுத்திருந்தபோது நான்கு ஐந்து சூட்டுச்சத்தங்கள் கேட்டன. அப்போது வீட்டில் எல்லோரும் நித்திரைவிட்டெழுந்து விருந்தைப்பக்கமாக ஒதுங்கிநின்றோம்.

'எங்கள் வீட்டிற்கருகில் இரு சிறுவீடுகள் இருந்தன. ஒன்றுக்குள் இறந்தவரும் மற்றதற்குள் அவரது தந்தையும் படுத்திருந்தனர் இருவீட்டிற்கும் நடுவில்உள்ள முற்றத்தில் ஷெல் விழுந்துவெடித்துச் சிதறியது. இருவரும் காயமடைந்தனர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோது வழியில் மகன் மரணமானர்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்து. (இ)

## லண்டன் பயணம்

யாழ்ப்பாணம், புதன்

இளவாலை சென் சென்றிஸ் கல்லூரியின் உப அதிபர் வணபிதா ஜஸ்ரின் ஞானசேகரம் அடிகள் உயர் கல்விக்காக லண்டனுக்குப் பயணமாகியுள்ளார். ஒருவருடகாலம் இவர் அங்கு உயர்கல்வி கற்பார் எனத் தெரிகிறது (ச - ஊ)

# ஆப்கானிஸ்தானிலிருந்து 6 ராணுவ அணிகள் வாபஸ்!

## சோவியத் தலைவர் கோபச்சேவ் அறிவிப்பு

மாஸ்கோ, ஜுலை 29

**ஆப்கானிஸ்தானிலிருந்து ஆறு இராணுவ அணிகளைக் கொண்ட ஏழாயிரம் சோவியத் துருப்புக்களை வாபஸ் பெற்றுக்கொள்ளப்போவதாக சோவியத் அதிபர் திரு. மிக்கேல் கோபச்சேவ் தெரிவித்துள்ளார் இந்த அறிவிப்பை பல நாடுகளும் வரவேற்றுள்ளன.**

ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் சோவியத் யூனியனுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். திரு கோபச்சேவ் இவருடன் கலந்து கொண்ட வைபவமொன்றிலேயே நேற்று மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சோவியத்யூனியன் ஆறு வருடங்களுக்கு முன்னர் 1980-ம் ஆண்டில் ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவியிருந்தது. இதையடுத்து இங்கு படிப்படியாக சோவியத்படைப் பலம் அதிகரிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது

தற்போது சுமார் ஒருலட்சத்துக்கு மதிகமான சோவியத் துருப்புகள் ஆப்கானிஸ்தானினுள் நிலை கொண்டுள்ளன திரு.கோபச்சேவ் வாபஸ் பெற்றுக் கொள்ளப்போவதாகக் கூறியிருக்கும் 7 ஆயிரம் துருப்புக்களைக்கொண்ட ஆறு இராணுவ அணிகளும் ஆப்கானிலுள்ள சோவியத்துருப்புகளில் 6 வீதமேயாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் தற்போது சோவியத்யூனியன் முதல் தடவையாக இராணுவ வாபஸை அறிவித்திருப்பது படிப்படியான இராணுவ வாபஸ் நடவடிக்கைகளுக்கு ஏதுவாக அமையும் என நம்பப்படுகிறது.

இதேவேளை பாகிஸ்தான், அமெரிக்கா உட்பட பலநாடுகள் சோவியத்யூனியனின் இந்தபடைவாபஸ் அறிவிப்பை வரவேற்றுள்ளன. ஆயினும் இந்த அறிவிப்பு போலியான தொன்றென ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிக் குழுக்கள் அறிவித்துள்ளன. (கி)

## தென் சூடானில் மோதல் ஆயிரக்கணக்கில் அகதிகள்

கார்ட்டூர்ன், ஜுன் 29

சூடானின் தென்பகுதிப் பிரதேசமான ஜுபாவில் அரசபடைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இம்மோதலினால் ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாகியுள்ளனர். இவர்களில் அநேகர் சிறுவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுத் தட்டுப்பாட்டுடன் ஏனைய பல சிரமங்களும் இம்மக்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூடான் மக்கள் விடுதலை இராணுவம் என்ற கிளர்ச்சிப் பிரிவே இந்த மோதல்களில் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது

மோதல்கள் காரணமாக இழப்புகள் பெருமளவில் ஏற்படலாம் என இக்கிளர்ச்சிப் பிரிவு மக்களை எச்சரித்து ஜுபா பகுதியிலிருந்து அவர்களை வெளியேறும்படி கேட்டுள்ளது.

### போர்த்துக்கல்லில் சிறை உடைப்பு:
## 6 கொலைக் கைதிகள் தப்பியோட்டம்

லிஸ்பன், ஜுலை-29

போர்த்துக்கல்லில் நேற்று இடம்பெற்ற சிறை உடைப்பொன்றில் ஆறு பயங்கர கொலைக்குற்றவாளிகள் தப்பிச் சென்றனர். இவர்கள் மூன்று சிறைக்காவலர்களை சுட்டுக்கொன்றதுடன் வேறு இருவரைக் காயப்படுத்திய பின்னர் பிரஸ்தாப சிறையிலிருந்து தப்பியோடினர்.

உலகச் செய்திகள்

அக் கைதிகள் ஆறுபேரும் தமது கூடங்களிலிருந்தும் வெளியேறி காவலுக்குநின்ற காவலாளிகளை அவர்களிடமிருந்த 'ரைபிள்'களைப் பறித்துச் சுட்டனர். தொடர்ந்து அச் சிறைச்சாலைக்குள்நின்ற வாகனமொன்றில் வேறுசில காவலாளிகளை பணயக்கைதிகளாக்கிக்கொண்டு வெளியே தப்பிச்சென்றனர்.

இக் கைதிகள் ஆறுபேரும் பயங்கரக் குற்றவாளிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது இவர்கள் தற்போது ஸ்பானிய இலக்கத் தகடு போடப்பட்ட மோட்டார் காரொன்றில் போய்க்கொண்டிருப்பதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## புதுடில்லியில் கலவரம் 6 பேர் பலி

புதுடில்லி, ஜுலை 29

இந்தியத் தலைநகரான புதுடில்லியில் கடந்த இரு தினங்களாக நடைபெற்ற சீக்கிய-இந்து கலவரங்களினால் ஆறு பேர் கொல்லப்பட்டனர். சுமார் 40 பேர் காயமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று பஞ்சாப்பில் பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த 14 இந்துக்கள் சீக்கியத் தீவிரவாதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்தே இக்கலவரங்கள் வெடித்தன.

கலவரங்களையடுத்து புதுடில்லியில் ஊரடங்குச்சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. [ஊ]

## நிதி உதவி

யாழ்ப்பாணம், புதன்

கொக்கிளாய் கிராமத்தில் இருக்கின்ற சிங்கள அகதிகளுக்கும் அநுராதபுரம் அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது [க]

### சூரிநாமில் ஆட்சி கவிழ்ப்பு முயற்சி:
## 14 அமெரிக்க கூலிப்படையினர் கைது; திட்டமும் முறியடிப்பு!

வாஷிங்டன், ஜுலை-29

தென் அமெரிக்காவின் வடகரையோர நடான சூரிநாமில் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவிருந்த அமெரிக்கப் படையொன்று கைது செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இதன் திட்டங்களும் முறியடிக்கப்பட்டுள்ளன.

டச்சு கம்பனியொன்றின் அனுசரணையுடனேயே இந்த ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கை இடம்பெறவிருந்ததாக அறிவிக்கப்பட்டது. இதற்கான பிரஸ்தாப கம்பனி ஒருகோடி அமெரிக்க டாலர்களை அக் கூலிப்படைக்கு வழங்கியிருந்ததெனவும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் 'நியூ ஒளியன்ஸ்' மாநிலத்திலேயே சூரிநாம் செல்லவிருந்த அமெரிக்க கூலிப்படையினர் கைதானார்கள் இப்படையில்14பேர்இடம் பெற்றனர். அத்துடன் இவர்களிடம் அதிநவீன ஆயுதங்களும் ஏனைய ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைக்கான திட்டங்களும் இருந்தனவென்று தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க எவ். பி. ஐ. புலனாய்வு ஸ்தாபனத்தினரும், சுங்க இலாகாவினரும் இந்த கூலிப்படை நடவடிக்கையை முறியடித்தனர்.

தென் அமெரிக்காவின் வடகரையோர நாடான சூரிநாம் ஒரு டச்சு காலனித்துவ நாடாக இருந்ததென்பதுகுறிப்பிடத்தக்கது இங்கு டச்சு அரசாங்கத்தின் பின்னணியுடனேயே ஆட்சிக்கவிழ்ப்புக்கு திட்டமிடப்பட்டதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க்,

★ அவுஸ்-திரேலியா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

★ சவுதிஅரேபியா

கிளினேஸ்க்கு பிரயாண ஒழுங்குகள் 20 நாட்களுக்குள் செய்து கொடுக்கப்படும்.

(i) வைத்தியசாலை
(ii) விமான நிலையம்
(iii) தொலைத் தொடர்புத் திணைக்களம்

மற்றும்:-

★ லிபியா ★ குவைற்

★ டுபாய் ஆகிய நாடுகளுக்கும் உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

அத்துடன்

பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற்றிங் என்பன உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

**யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,**

125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(பெற்ரோலியம் கூட்டுத்தாபன முன்பாக, ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை.)

(A-796)



## இன்ரநாஷனல் கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்

International Communication Complex.




282 A, யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.

உள்நாட்டு-வெளிநாட்டு தொலைபேசி (Telephone)

★ தொலைத்தொடர்பு (Telex)

★ பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே நிம்மதியாக, நேரடியாக உலகின் எப் பகுதிக்கும் தொடர்புகொள்ள-

★ இரவு-பகல் 24 மணி நேரமும், வாரம் பூராவும் தொடர்ச்சியான சேவையைப் பெற தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே ஒரு நவீன

தகவல் தொடர்பு நிலையம்!

(A777)

எம்மிடம் குவைத் செல்வதற்கு பாஸ் போட் தந்தவர்களுக்கு விசா வந்துள் ளது. கீழ் குறிப்பிடும் நபர்கள் உடனடி யாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| பெயர்: | பாஸ்போட் இல. |
|---|---|
| 1. V. T. ராதா | H 0085410 |
| 2. A. குணசீலன் | H 0477799 |
| 3. A. ஞானசேகரம் | F 121963 |
| 4. S. ரவிச்சந்திரன் | H 0216914 |
| 5. T. விஜயகுமார் | F 255991 |
| 6. R. அமிர்தலிங்கம் | H 0254287 |
| 7. S. மோகனராஜ் | H 0100925 |
| 8. K. N. இந்திரன் | H 0354027 |
| 9. V. சுப்பிரமணியம் | H 0402692 |
| 10. M. மகேஸ்வரன் | H 0356331 |
| 11. N. சிறீரங்கநாதன் | H 0418650 |
| 12. A உதயகுமார் | H 0483341 |
| 13. S T. ராஜ்குமார் | H 0369798 |
| 14. K. V செல்வவீரசிங்கம் | H 0072975 |
| 15. S. தர்மராஜா | H 0480600 |
| 16. S நர்தசுகன் | H 0312174 |
| 17. N. ஜெயசீலன் | H 0321797 |
| 18. S. R. பிரபாகரன் | H 0443701 |
| 19. K. சந்திரசேகரம் | H 0385161 |
| 20. K. A. ஆனந்தராஜா | H 0240976 |
| 21. P. நடராஜா | H 0055205 |
| 22. K. ரட்ணசிங்கம் | H 0102892 |
| 23. S. ராஜேஸ்வரன் | H 0395484 |
| 24. V. தியாகநாயகலிங்கம் | H 0215936 |
| 25. T. சந்திரகுமார் | H 0349045 |
| 26. K. A சிவராஜா | H 0[illegible]74044 |
| 27. G. T. தாமரைமணாளன் | H 0460039 |
| 28. A. C. அருள்தாஸ் | H 0281546 |
| 29. S. இந்திரராஜா | H 0320080 |
| 30. J A. வலன்டீன் | G 0341780 |
| 31. J F பெர்னாண்டோ | H 0291184 |
| 32. T. S சிவதாசன் | H 0281339 |
| 33. R. சேகர் | H 0419775 |
| 34. S செல்வராஜா | H 0474625 |
| 35. V. S. சேனாதி | H 0244462 |
| 36. E P மாணிக்கம் | H 0435145 |
| 37. A. K கருணன் | H 0239180 |
| 38. V. T சுகுணலிங்கம் | H 0311377 |
| 39. N. M. சூரியகுமார் | H 0313554 |
| 40. H. A. ரொபேட் | H 0267229 |
| 41. S. ஏகாம்பரநாதன் | H 0465630 |
| 42. S. P. தவராஜா | H 0328045 |
| 43. A. மகிபாலா | H 0356157 |
| 44. A. K. சிவபாலன் | H 0342607 |
| 45. P. E சந்திரன் | H 0342781 |
| 46. A. M. மேரு | H 0483326 |
| 47. S. குழந்தவேல் | H 0310680 |
| 48. T. செல்லன் | H 0347126 |
| 49. A P அமரசிங்க | H 0128040 |
| 50. B. குணேந்திரலிங்கம் | J 0009842 |
| 51. K. செல்வநாயகம் | H 0325412 |
| 52. T. T. மகேஸ்வரன் | H 0310929 |
| 53. S சிறீஸ்கந்தவேல் | H 0074941 |
| 54. K. T. ஷஜயரட்ணம் | H 0064813 |
| 55. M. மகாலிங்கம் | H 031384 |
| 56. P. விஜயபவன் | H 0260185 |
| 57. K. தவலிங்கம் | H 0285169 |
| 58. K. ரவீந்திரன் | H 0324689 |
| 59. P. S. தேவராசன் | H 0106813 |
| 60. S V. கேதீஸ்வரன் | H 0105358 |
| 61. S. V. குமரன் | J 0027119 |
| 62. P. கிருஷ்ணமூர்த்தி | H 0296768 |
| 63. S. S ராஜலிங்கம் | H 0386676 |
| 64. P. மகேந்திரன் | G 0172911 |
| 65. P உதயகுமார் | G 0085639 |
| 66. P. விஜயபாஸ்கரதாசன் | J 0000871 |
| 67. T. விஜயகுமார் | H 03729[illegible]4 |
| 68. S. விக்கினேஸ்வரன் | H 0375914 |
| 69. T. I வரதராசா | G 0400405 |
| 70. V. R. லோகநாதன் | G 0461485 |
| 71. N. S ஆனந்தராஜா | G 0343457 |
| 72. S. தெய்வேந்திரா | H 0154005 |
| 73. V. K. S குலதேவசிங்கம் | H 0405754 |
| 74. P. குணேந்திரன் | E 181911 |
| 75. N P. யோகராஜா | H 0205207 |
| 76 C. C. பிரான்சிஸ் | H 0287986 |
| 77. S ஞானசேகரன் | H 0306655 |
| 78 K. N சண்முகநாதன் | H 0198135 |
| 79. S. சுதாகரன் | H 0358066 |

## யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,

125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(பெற்றோலியம் கூட்டுத்தாபன முன்பாக,
ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை.)

(A 1010)

## தமிழீழபிரசுரத்துடன் நான்கு சிங்கள இளைஞர் கைது

கொழும்பு, செவ்

பொலனறுவைமாவட்டத்தி லுள்ள கிராமமொன்றில் தமி ழீழ ஆதரவுப் பிரசுரங்களை வைத்திருந்த 4 சிங்கள இளை ஞர்களை கைது செய்துள்ள தாக அரசாங்கம் அறிவித் துள்ளது.

இந்த நால்வரும் ஜே.வி.பி யை சேர்ந்தவர்களெனவும் அரசு அறிவித்துள்ளது. [ஊ]

## மட்டக்களப்பிற்கு விசேஷ பஸ்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மட்டக்களப்புக்குப் பிரயா ணம் செய்வோரின் நலனைமுன் னிட்டு விசேஷ இ போ.ச பஸ் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டுள் ளது.

பயணம்செய்ய விரும்புவோர் இம்மாதம் 31ம் திகதி வியாழக் கிழமை காலை யாழ். பஸ் நிலை யத்தில் பதிவுசெய்துகொள்ள லாம்.

ஆகஸ்ட் 1ம் திகதி வெள்ளிக் கிழமை இந்த பஸ் புறப்படு மெனத் தெரியவருகிறது.

[சி-இ]

## இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 14 (1986-7-30)
கிழமை: புதன்
திதி: நவமி பி. ப. வரை
நஷத்திரம்: பரணி காலை 6-24ன் மேல் கார்த்திகை

மேடம்: மயக்கும் மொழி களால் பணத்தை இழக்க நேரிடும். முடங்கிய வேதனைக் கவலையைத் தரலாம். வரவி லும் மிஞ்சிய செலவுக்கிட முண்டு.

இடபம்: வாழ்விலும் வள மான திருப்பம் காணுவீர்கள் பேச்சின் மத்தியிலும் காரியத் தைச் சாதிப்பீர்கள். மகிழ்ச்சி தரும் செய்திக்குமிடமுண்டு

மிதுனம்: அக்கினி ஆயுத பீடைக்குமிடமுண்டு. கழுகுப் பார்வை வட்டமிடும். இத யத்திலும் அமைதி குன்றும்

கடகம்: பெரியவர் ஆசி தாராளமாகக் கிடைக்கும். இனபந்துக்கள் உங்களை உற் சாகப்படுத்துவர். புதிய முயற் சிகளும் கைகூடலாம்.

சிங்கம்: துள்ளிவரும் வெள் ளிப்பணம் தொடர்புகளை ஏற் படுத்தும். தொழில் முன் னேற்றமுண்டு. புத்திரர் சுகமு முண்டு. சுபதினம்.

கன்னி: அடுத்துக் கெடுப்ப தற்கு சிலர் முனைவர். அவ சரக்கோலம் தென்படும். நண் பர்களாலும் தொல்லைகள் ஏற் படும். பொறுமை நன்று.

துலாம்: இல்லத்திலும் இனி மையான நிகழ்ச்சிகள் இடம் பெறும் கல்வி நலனுக்குமிட முண்டு. சிலருக்கு வெளிநாட் டுப்பயணத்திற்கும் வழி கோலப்படலாம்.

விருச்சிகம்: எதிலும் தடை கள் தோன்றும். பணமுடக்க மும் தோன்றும். வாகனம் செலுத்துவோர் பாதிப்படை வர். எதிலும் அவசரப் போக் கைத் தவிர்க்கவும்.

தனுசு: குருவின் ஆசியுடன் குறிக்கோள் வெற்றிக்குமிட முண்டு. இரக்க சிந்தையும் மேலிடும். குடும்ப ஒத்துழைப் புக்குமிடமுண்டு.

மகரம்: என்றும் போல் வாழ்வு இன்று மலரும். நன் மதிப்பிற்குஇடமுண்டு. பூமி யால் நன்மை சேரும். பண வரவுமுண்டு.

கும்பம்: பிறர் ஆதரவு தாராளமாகக் கிட்டும் எதி லும் லாபமீட்டலாம். முத லீடு செய்வதற்கிடமுண்டு வாழ்வும் மலரும்

மீனம்: எதிர்ப்பார்த்த முடி வில் ஏமாற்றம் தோன்றும் உடல்நலமும் பாதிக்கப்பட லாம். எதிர்ப்புகளும் தோன்ற லாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## யானை தாக்கி ஒருவர்பலி

ஒட்டுசுட்டான், செவ்

மாங்குளத்திலிருந்து ஒட்டு சுட்டானுக்கு எருது மாடு கள் கொண்டுவரும் பொழுது வீதியை குறுக்கிட்ட கொம் பன் யானைஒன்று ஒருவரைப் பலிகொண்டது

இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது.

விவசாயிகள்மூவர் கூட்டாக மாடுகளை மேய்த்துவரும் பொழுது 14வது மைலில் இவர்களை எதிர்பாராமல் எதிர்கொண்ட யானை ஒரு வரை மட்டும் தாக்கியுள்ள இதனால்அவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார்.

[ஊ-இ]

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த கந்தையா குமர குருவின் மரணசாதன மில்லாத சொத்துக்கள் விடயத்தில்

மரணமெய்தியவர்.

குமரகுரு கைம்பெண் ஈஸ் வரிதேவி மறுநாமம் இரா சம்மா, கரவெட்டி கிழக்கு

மனுதார்

இல. 1235/T

எதிர்

1. குமரகுரு தவகுருதேவன்
2. குமரகுரு குருமணிதேவி
3. குமரகுரு இராசகுரு. கரவெட்டி கிழக்கு.

பிரதிவாதிகள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப் பிடப்பட்ட இறந்துபோன வரின் மரணச்சொத்தை நிரூ பிப்பதற்காக மேற்படி நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின் னுறுதிக்கட்டளை பதியப்பட் டுள்ளதென்றும்,

அக்கறையுள்ள ஆள் எவ ரும் 1986-ம் ஆண்டு புரட் டாதி மாதம் 19-ம் திகதி முற் பகல் 9-00 மணிக்கு இந்நீதி மன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற் றுனதாக்கப்படலாகாது என் பதற்குக் காரணம்காட்டு மாறு இத்தால் தேவைப்படுத் தப்படுகின்றீர்.

1986-ம் ஆண்டு ஆடி மாதம் 14-ம் திகதி

மன்றின் கட்டளைப்படி
சண்முகம் நடராசா
(பதிவாளர்)

வரைவு:
பெ. செ. பாலசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

[C 3696

## அறிவித்தல்

அளவெட்டி தெற்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் சீட்டி ழுப்பு விபரங்கள்:-

| | | |
|---|---|---|
| 1 - | இல | 1371 |
| 2 - | இல | 194 |
| 3 - | இல | 1057 |
| 4 - | இல | 1646 |
| 5 - | இல | 2436 |
| 6 - | இல | 1576 |
| 7 - | இல | 774 |
| 8 - | இல | 2261 |
| 9 - | இல | 1210 |
| 10 - | இல | 1905 |
| 11 - | இல | 16[illegible]1 |
| 12 - | இல | [illegible]645 |
| 13 - | இல | 1637 |
| 14 - | இல | 2189 |
| 15 - | இல | 290 |
| 16 - | இல | 2270 |
| 17 - | இல | 428 |
| 18 - | இல | 505 |
| 19 - | இல | 08 |
| 20 - | இல | 649 |

திருப்பணிசபை
(C-3747)

"என் பொருட்டும், நற்செய்தியின் பொரு ட்டும் தன் உயிரை இழப்பவனே அதைக் காத்துக் கொள்வான்"
மாற்கு 8: 35

## 31 ம் நாள் நினைவஞ்சலி



அருட்செல்வி
பேணடேற் குலாஸ்
திருச்சிலுவைக் கன்னிகை

மலர்வு; 06-09-1948
அர்ப்பணம்: 09-02-1972
உதிர்வு: 30-06-1986

02-07-86 அன்று அன் னாரின் இறுதி யாத்தி ரையில் கலந்து ஆறுதல் அளித்த யாழ் ஆயர், குருக்கள், கன்னியர்கள் அருட்சகோதரர், அன் பர்கள் அனைவருக்கும் எம் நன்றிகள் இவரின் பிரிவால் துயருறும்,

பெற்றோர், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர். (C 3744)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
திருமதி இரத்தினம் முத்தையாப்பத்தர்
மண்ணுலகு:
14-02-1916
விண்ணுலகு:
30-06-1986

அன்பின் உருவாய், அறி வின் சுடராய், பண்பின் நிறைவாய், பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து எமக்கெல்லாம் நல்வழி காட்டிய எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து 31 நாள் சென்றாலும் உங் கள் நினைவு எமது இத யத்தை விட்டு என்றென் றும் பிரியாது நிற்கும். தங்களின் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக் கிறோம்.

30-07-1986 (இன்று) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரி யையில் கலந்து கொள் ளுமாறு உறவினர்களை யும், நண்பர்களையும் அன் புடன் அழைக்கிறோம்.

ச. முத்தையாப்பத்தர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

11/3, செம்மணி வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர். (C 3753)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
புதன்கிழமை 30-7-86

# "பொதுத்தேர்தலோ, சர்வஜனவாக்கெடுப்போ நடத்தாமல் அடுத்த இரண்டு மாதத்திற்குள் இனப்பிரச்னைக்கு தீர்வு காணலாம்"

## -ஜனாதிபதி நம்பிக்கை

கொழும்பு, செவ். "சர்வஜன வாக்கெடுப்பையோ அல்லது பொதுத் தேர்தலையோ நடத்தாமல் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இனப்பிரச்னைக்குத் தீர்வு கண்டுவிடமுடியும்" என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துறை வங்கிகளின் ஜாதிக சேவ சங்கமய ஸ்ரீ ஜெயவர்த்தனபுரத்தில் நடத்திய பொதுக்கூட்டத்தில் பேசும்பொழுதே திரு. ஜெயவர்த்தனா இவ்வாறு கூறினார்.

நாட்டின் ஒற்றையாட்சி அந்தஸ்தைப் பேணும் அதேவேளையில் மாகாணசபைகள் அமைக்கப்படும் என்றும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசியல் யாப்புக்கு திருத்தம் கொண்டுவந்த பின்னர் இவ்வாறு செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாகாண சபையும் பல மாவட்டங்கள் இணைந்த அமைப்பாக இருக்கும் என்றும் இது நாட்டை பிளவுபடுத்தும் செயல் அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபைத் திட்டம் குறித்து வெளிநாடுகளில் எமக்கு ஆதரவு கிடைத்துள்ளது. இத்திட்டம் பற்றி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி வெகு விரைவில் தமிழ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கிறேன் என்றார். (ஒ)

## பணிமனை இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன். திருநெல்வேலியில் தற்போது செயற்பட்டுவரும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நல்லூர்கந்தசாமி ஆலயத்திற்கு சமீபத்தில் உள்ள இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (ச-இ)

# "ராஜீவ் நல்லெண்ணத்தை பயன்படுத்தவேண்டும்"

## -அமைச்சர் தொண்டமான்

சென்னை, ஜூலை 30. "இலங்கையின் இனப் பிரச்னை தீர்வுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி பொறுப்பெடுத்து இப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்று கிராமிய கைத்தொழில் துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியிலிருந்து நேற்று சென்னை திரும்பிய அமைச்சர் எஸ். தொண்டமான் விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களிடம் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் அண்மையில் கொழும்பில் நடாத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து அமைச்சர் தொண்டமான் இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி குடியரசுத்துணைத்தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், வெளியுறவு அமைச்சர் திரு. சிவ்சங்கர். இந்திய வெளியுறவு கொள்கை வகுப்புக்கமிட்டித்தலைவர் திரு ஜி பார்த்தசாரதி ஆகியோருடன்தான் ஆலோசனை நடாத்தியதாகக் கூறினார்.

இலங்கையின் இனப்பிரச்னையைத்தீர்ப்பதற்கு பிரதமர் திரு. ராஜீவ்காந்தி தன்னுடைய நல்லெண்ணத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று அமைச்சர் தொண்டமான் அவரைக்கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனையும் அமைச்சர் தொண்டமான் நாளை சந்திக்கவுள்ளார். (வா)

# 'இலங்கை இனப் பிரச்னைக்கு விரைவில் சுமுக தீர்வு'

## இந்திய பத்திரிகை நம்பிக்கை

கொழும்பு, செவ். இலங்கை இனப்பிரச்னைக்கு விரைவில் சுமுகத்தீர்வொன்று காணப்படும் என இந்தியப் பத்திரிகையான 'நியூ ஸ்ரேர்ஸ்மன்' கூறியுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு சிவ்சங்கர் தனிப்பட்ட விஜயமொன்றினை மேற்கொண்டு தமிழகம் வந்திருந்ததாகவும், இலங்கைப் பிரச்னைக்கு விரைவில் தீர்வுகாணப்படுமென்ற நம்பிக்கையை இவரது விஜயம் ஏற்படுத்தியுள்ளது எனவும் இப்பத்திரிகை கூறியுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளினால் மாறிவரும் சூழ்நிலைகளை உணர்ந்து நிதானமாக நடந்துகொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழக முதல்வர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. [ஊ]

## யாழ்ப்பாண-நீர்வேலி மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம், புதன். நீர்வேலியில் வாழும் மக்களின் கோரிக்கைக்கிணங்க அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நீர்வேலி-யாழ்ப்பாணம் சேவை நடாத்தப்படவிருப்பதாக வடபிராந்திய மினிபஸ் சேவை பஞ்சாயத்து அமைப்பாளர் திரு பொன். மதிமுகராசா தெரிவித்துள்ளார். (ச)

# களவுகள் நீடித்தால் — பாவனையாளர்கள் சிரமத்திற்குள்ளாவர்

யாழ்ப்பாணம், புதன். "வர்த்தகர்களின் பணம், பொருள், நகைகள் களவுபோகும்நிலை நீடிக்குமானால் பாவனையாளர்களே மிகுந்த சிரமத்திற்குள்ளாவார்கள்."

யாழ். வர்த்தக சங்க செயலாளர் திரு சி. நமசிவாயம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;-

'யாழ்.வர்த்தகசங்க அங்கத்தவர்களாகிய மின்சாரநிலைய வீதியில் உள்ள சீமாட்டி ஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு. சு. சோதிநாதனின் ஸ்தாபனத்திலும், மானிப்பாய்வீதியைச்சேர்ந்த இந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு என். வெங்கட்ராமன் வீட்டிலும், அதே வீதியைச் சேர்ந்த சின்னத்துரை ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. ந. க. சின்னத்துரையின் ஸ்ரோர்ஸிலும் முறையே பணம், நகை, பொருட்கள் களவுபோனதையிட்டு வர்த்தகர்சங்கம் மிகுந்த கவலை தெரிவித்துள்ளது. [இ-எ]

## ஆடு வேட்டை

ஒட்டுசுட்டான், செவ். ஒட்டுசுட்டானில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் முகாமையண்மித்து ஒரு மைல் சுற்றாடலில் ஜீப்வண்டிகளில் அடிக்கடி ரோந்து செல்கின்றனர். அச்சமயங்களில் வீதியில் தென்படும் ஆடுகளைத் துப்பாக்கியால் சுட்ட பின் எடுத்துச் செல்கிறார்கள் எனத் தெரியவந்துள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன் கற்சிலைமடு என்னும் கிராமத்தில் இரண்டு ஆடுகளைச் சுட்டு எடுத்துச் சென்றனர். [இ]

## இயக்குநர் திரும்பவில்லை

யாழ்ப்பாணம், புதன். காரைநகர் தண்ணீர் விநியோகத் திட்டத்தில் தண்ணீர் இறைக்கும் இயந்திர இயக்குநர் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் கடற்படையினரால் முகாமை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் அழைத்துச் செல்லப்பட்ட பின் வீடு திரும்பாததால் அவரின் உறவினர்கள் அவர் பற்றிய தகவலைப் பெற்றுக் கொள்ள முனைந்தபோது அவர் நிலைமை தமக்குத் தெரியாது என சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

இயக்குநரை கடற்படையினர் அழைத்துச் சென்றபோது தான் போராளிகளுக்கும் கடற்படையினருக்கும் மோதல் ஏற்பட்டதாம். (ச-இ)

## நலன் புரிச்சங்க அலுவலகம்

புலோலி, செவ்வாய். பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச்சங்க அலுவலகம் இன்று புதன்கிழமை முதல் செயல்படத் தொடங்குமென நோயாளர் நலன் புரிச்சங்கத்தலைவர் டாக்டர் கே. லலிதகுமார் அறிவித்துள்ளார். (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

# மரண அறிவித்தல்

## பொன்னையா குமாரசாமி J. P.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பொன்னையா குமாரசுவாமி J. P. அவர்கள் [Retired O. A. Survey DePt] காலமானார். இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், கமலகுமார், உதயகுமார், பிரேமகுமார் [Canada], ஜெயகுமாரி, காலஞ் சென்ற பாலகுமார், ராஜகுமார், விஜயகுமார் [Canada] ஆகியோரின் அருமைத்தந்தையும், புவனேஸ்வரி, ஜோசி, ஆலாலசுந்தரம் [Saudi Arabia], ரஞ்சிதம், நளினி, லியோனார் ஆகியோரின் அன்புமாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [30-7-86] மாலை 4 மணியளவில் குடும்ப மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். கு. கமலகுமார், பொன்னையாவளவு, பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை.

[C3773]

## திருமதி மரியம்மா ஞானப்பிரகாசம் [சிங்கப்பூர் மரியண்]

சில்லாலை திருமதி மரியம்மா ஞானப்பிரகாசம் 1986-07-28 அன்று இறைவனடிசேர்ந்தார். இவர், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் [மாதகல்] அவர்களின் அன்புமனைவியும், ஜோசப் வலன்ரைன் [கோலாலம்பூர்], ஆயர் அன்ரனிசெல்வநாயகம் [பினாங், மலேசியா], காலஞ்சென்ற ஆன்நேசமலர் திருமதி மாகிறேட் ரோஸ்மணி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி மேரிமக்டலின் தங்கம் [மலேயா] திரு. A. சிங்கராயர், திரு F. A. குணசேகரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சேளி, பேட்டி, திருமதி ருத்சூரியக்குமார், டிலிப் ரோகான், பேணி, பேட்றம், ஜெயக்குமார், நிர்மலா, சுரேஸ்குமார், ரிரோன் ஆகியோரின் பாட்டியும், ஜெரமியின் அன்புப் பீட்டியும் ஆவார். இறுதிச்சடங்குகள் 30-7-86 மாலை 3-30 மணிக்கு சில்லாலையில் கதிரைமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இரங்கற் பலியின்பின் நடைபெறும்.

சில்லாலை.

[C3769]

## இ. வேலாயுதர்

முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகரும், யா/கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலய இளைப்பாறிய ஆசிரியரும், இருபாலை கிராமோதயசபை தலைவரும், ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத் தலைவரும், நயன்மார்கட்டு ஆயுர்வேதவைத்தியசாலை தர்மகர்த்தாசபையின் முன்னாள் அங்கத்தவருமான திரு. இராமசாமி வேலாயுதர் அவர்கள் 27-07-1986 அன்று சிவபதமடைந்தார். அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், வைத்தியகலாநிதி சூரியகுமாரன் [U K], காலஞ்சென்ற சிவகுமாரி, சொர்ணலிங்கம் [அரச நில அளவையாளர், வாழைச்சேனை], இர ஜசூரியர் [U K] சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத்தந்தையும், வைத்திய கலாநிதி திருமதி சாந்தினி [U. K], இந்துமதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாந்தன், காயத்திரி, காண்டீபன், சுஜிதன் ஆகியோரின் பேரனும், நாயன்மார்கட்டு ஆயுர்வேத முறிவு வைத்திய நிபுணர் காலஞ்சென்ற திரு தியாகராஜா, காலஞ்சென்ற திருமதி கனகம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும், திருமதி யகேஸ்வரி சீவரத்தினம், திரு. சோமசேகரம் ஓய்வு பெற்ற கணக்காளர், ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி இராஜாமுத்தையா [தெரனியகலை], திருமதி சிவகாமிப்பிள்ளை நடராஜா, திரு இராமநாதன் மின்பொறியியலாளர் [U K.] திரு யோகானந்தர் சட்டத்தரணி [U. K] ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கவீதி இல்லத்தில் 31-07-86 வியாழன் காலை 10-00 மணியளவில்நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சாந்திபவனம், ஞானபாஸ்கரோதயசங்கவீதி, கல்வியங்காடு.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[C3775]